நான் கைக்கடிகாரத்தைப் பார்த்தபோது, அது இரவு மணி ஏழு என்பதைக் காட்டியது. நிமிர்ந்து ரயில் வண்டி வரும் அறிவிப்புப் பலகையைப் பார்த்தேன், அதில் அடுத்த வண்டி 7.15க்கு என்று காட்டியது. 'ம்… இன்னும் 15 நிமிடங்கள் காத்திருக்கவேண்டும். ஒரு நிமிடம் முன்னதாக வந்திருந்தால், இப்போது வண்டியில் பயணித்துக்கொண்டிருப்பேனே!,' என்று எண்ணியவாறு அங்குமிங்கும் தலையைத் திருப்பி இருக்கை ஏதாவது கண்ணில் படுகிறதா என்று பார்த்தேன். கடைசி மூலையில் ஓர் இடம் கண்ணில் பட்டது. யாராவது போய் உட்காருவதற்குள் அந்த இருக்கையைக் கைபற்றிவிட வேண்டுமென்ற ஆர்வத்தில் ஓட்டமும் நடையுமாகச் சென்று அந்த இடத்தைப் பிடித்துவிட்டேன். அந்த இருவர் அமரும் இருக்கையில் ஒரு பக்கம் அமர்ந்திருந்த இளைஞனுடன் என் வெற்றியைப் பகிர்ந்து கொள்ள ஒரு புன்னகையை அவனைப்பார்த்து உதிர்த்தேன். அவன் அதைக் கண்டும் காணாததுமாக எனக்கென்ன என தன் காற்சட்டைப்பைக்குள்ளிருந்து தன் திறன்பேசியை உருவி தன் தலையைக் கவிழ்த்து அதன் மீது தன் கவனம் முழுவதையும் புதைத்துக்கொண்டான். என் கவனத்தை நிலையத்தைச் சுற்றி மேயவிட்டேன். அப்போது அந்நிலையம் மிகவும் கூட்டமாகவே இருந்தது. அனைவர் கவனமும் தங்களுடைய திறன்பேசிகளில் மூழ்கியிருந்தது. இவர்கள் கைகளிலிருக்கும் திறன்பேசிகள் அனைத்தும் திடீரென்று செயலிழந்துவிட்டால் என்னவாகும் என்று ஒரு எண்ணம் எனக்குள் தோன்றியது. ஐய்யோ! வேண்டாம்… வேண்டாம்! அப்படியெல்லாம் ஒன்றும் நடக்கவேண்டாம்! நமக்கேன் இந்த விபரீத எண்ணமென அப்படியே அதற்கு ஒரு 'சடன் பிரேக்' போட்டு நிறுத்திவிட்டேன். 'நான் அவசரத்தில் திறன்பேசியை மறந்து வீட்டிலேயே விட்டுவராமலிருந்தால் நானும் இப்போது இவர்களைப்போல் என் திறன்பேசிக்கு அடிமையாகத்தான் இருந்திருப்பேன். இனி இந்த வண்டி வந்து…, வீட்டைச் சென்று அடைவதற்குள் போதும் போதுமென்றாகிவிடும். பின்னர் குளித்து, சாப்பிட்டு படுப்பது, மீண்டும் காலையில் எழுந்து மீண்டும் ரயில் நிலையத்துக்கு வந்து ரயிலில் ஏறி மீண்டும் வேலைக்குச்

சென்றுவிடுவோம்...' என்று என் யோசனை வட்டத்துக்குள் சுழன்றுகொண்டே போனது.